கலைஞர் 100
1924 - 2023

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர்மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி:24.02.2024
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் "கொண்டைக்கடலையில் முதன்மை செயல் விளக்கம்" குறித்த வயல் விழா

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல் மையத்தின்பயறு வகைத்துறையின் ஏற்பாட்டில் , கொண்டைக்கடலை குறித்த அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் , 23.02.2024 அன்று திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டையில் "**கொண்டைக்கடலையில் முதன்மை செயல் விளக்கம்**" குறித்த வயல் விழா நிகழ்ச்சி நடைபெற்றது. உதவிப் பேராசிரியர் , முனைவர் .கோ.செந்தில்ராஜா, வயல் விழா நிகழ்ச்சியில்பங்குபெற்றவிவசாயிகளை வரவேற்றார். பயறு வகைத்துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சே. கீதா அவர்கள் , தலைமை உரையை ஆற்றி , இயந்திரமயமாக்கல் மூலம் கொண்டைக்கடலையில் தரமான விதை உற்பத்தி மற்றும் விதை உற்பத்தி மூலம் விவசாயிகளின் வருமானம் மற்றும் லாபத்தை அதிகரிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். உதவிப் பேராசிரியை முனைவர் கி.ஆனந்தி , அதிக மகசூல் தரும் கொண்டைக்கடலை ரகங்களை அவற்றின் குறிப்பிட்ட பண்புகள் மற்றும் சாகுபடி தொழில்நுட்பங்களுடன் விளக்கினார். சிறந்த விளைச்சலுக்கு, பூச்சி மற்றும் நோய் மேலாண்மைக்காக கொண்டைக்கடலையில் பின்பற்ற வேண்டிய ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை நடைமுறைகளின் முக்கியத்துவம் குறித்து உதவிப் பேராசிரியர் முனைவர் .கோ.செந்தில்ராஜா வலியுறுத்தினார். இறுதியாக , உதவிப் பேராசிரியர் முனைவர் கே.ஆனந்தி நன்றியுரை வழங்கினார். வயல் விழாநிகழ்ச்சியில் உடுமலைப்பேட்டை வட்டாரத்தைச் சேர்ந்த சுமார் 30 விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். பயிற்சியை வெற்றிகரமாக நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் பயறு வகைத்துறை விஞ்ஞானிகள் திறம்பட செய்தனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்